ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்களின் அடிக்கருத்துக்களையும் பிஹாரி பாடல்களின் அடிக்கருத்துக்களையும் கண்டறிதல்

**சி.காயத்ரி[1] & முனைவர் தி.சிந்தியா[2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர், [2] உதவிப் பேராசிரியர்**

**சாஸ்திரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம்**

**தஞ்சாவூர்**

**ஆய்வு சுருக்கம்**

சமூகத்தையும் பண்பாட்டையும் இணைக்கக்கூடிய ஆய்வாக இலக்கிய ஆய்வுகள் உள்ளன. இந்த இலக்கிய ஆய்வுகள் மூலம் தீர்வு காணமுடியாத சில சிக்கல்களுக்கு ஒப்பிலக்கிய ஆய்வுகள் மூலம் தீர்வு காணமுடியும். ஒப்பிலக்கியம் என்பது ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட மொழி, பண்பாடு, கலை, இலக்கியம் போன்றவற்றை ஒப்பிட்டு ஆய்வதில் முதன்மையாக இருக்கிறது. அதனடிப்படையில் தமிழ் சங்க இலக்கிய ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித்திணை பாடல்களின் அடிக்கருத்துக்களையும் இந்தி இலக்கிய பிஹாரி பாடல்களின் அடிக்கருத்துக்களையும் கண்டறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** ஐங்குறுநூறு, பிஹாரி பாடல்கள் , ஒப்பிலக்கியம்

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு வகையான இலக்கியப் போக்கைப் பெற்றுள்ளன. சங்க கால இலக்கியம், சங்கம் மருவிய கால இலக்கியம், பல்லவர் கால இலக்கியம், சோழர் கால இலக்கியம், நாயக்கர் கால இலக்கியம், ஐரோப்பியர் கால இலக்கியம், இக்கால இலக்கியம் எனத் தமிழ் இலக்கியங்களை வகைப்படுத்துகின்றனர். இந்தி மொழியின் இலக்கியக் காலக்கட்டத்தை வீரக்கதைக் காலம், பக்திக் காலம், ரீதிக் காலம், புதிய காலம் என நான்கு வகைகளாக குறிப்பிடுகின்றனர். இவை கதை, கவிதை, கட்டுரை, உரைநடை போன்றக் கூறுகளை உள்ளடக்கியதாக உள்ளது. இவற்றுள் பிஹாரி பாடல்கள் ரீதிகாலத்தில் இயற்றப்பட்டக் கவிதைகளாகும்.

**ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித்திணை இயல்புகள்**

ஐங்குறுநூறு திணை அடிப்படையில் ஐந்து திணைகளுக்கும் நூறு நூறு பாடல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு திணையையும் ஒவ்வொரு புலவர் பாடியுள்ளனர். ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் ஆவார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஆவார். இது 3-அடி சிற்றெல்லையும் 6-அடி பேரெல்லையும் கொண்ட அகவற்பாவல் ஆனது. இதன் வைப்புமுறையானது தொல்காப்பிய அடிப்படையில் இல்லாமல் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. இதற்குக் காரணமாக “தொகுத்தொரும் தொகுப்பித்தொரும் முறையே மலைநாட்டுப் புலவரும் மலை நாட்டரசரும் ஆதலால் ஆதனவினி சேரனைத் தலைவனாகப் பெற்ற முதற்பத்தையுடைய மருதம் முதலிலும் தொண்டிப்பத்தையுடைய நெய்தல் மருதத்தின் பின்னும் மலைநாட்டரசர்களைப் பாடி மலைநாட்டினர் பெரும்பாலும் வதிந்து மலைவளம் பாடுதலிற் புகழ்பெற்றக் கபிலர் பாடிய குறிஞ்சி நெய்தலின் பின்னும் சேர்க்கப்பெற்றன என்று இம்மூன்றுக்கும் ஒருவாறு முறை கூறலாமாயினும் பாலையும் முல்லையும் இவற்றின் பின்னர் முறையே அழைக்கப்பெற்றதற்கு காரணம் ஒருவாற்றானும் விளங்கவில்லை” என்று கூறுவர். ஐங்குறுநூற்றில் மூன்றாவதான குறிஞ்சித்திணை அன்னாய் வாழிப்பத்து, அன்னாய்ப்பத்து, அம்மவாழிப்பத்து, தெய்யோப்பத்து, வெறிப்பத்து, குன்றக்குறவன் பத்து, கேழர்பத்து, குரக்குபத்து, கிள்ளைப்பத்து, மஞ்ஞைப்பத்து எனப் பத்துப் பத்துப் பாடல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

**பிஹாரிப் பாடல்களின் இயல்புகள்**

பிஹாரிலால் என்பவரால் இயற்றப்பட்டது பிஹாரி பாடல்கள். இவர் இந்தியாவில் ஜோடிக் கவிதைகள் இயற்றுவதில் சிறந்தவராகக் குறிப்பிடுவர். பிஹாரி எழுதுவதற்குக் காரணமாக அமைந்தது ஜெய்சிங் என்ற அரசனின் காதல் தோல்வியாகக் கூறுகின்றனர். அரசர் ஒரு இளம் பெண்ணைத் திருமணம் செய்துக்கொள்கிறார். அதன் பிறகு அவள் விட்டு செல்லவே அவளது காதலில் தொலைந்து மீளமுடியாமல் படுக்கையில் இருக்கிறார். தனது கடமைகள், மற்ற மனைவிகள் என அனைவரையும் புறக்கணித்துவிடுகிறார். பின் அரசனை மீட்பதற்காக அமைச்சர்கள் மற்றும் அரசனின் மனைவிகள் பிஹாரிலாலிடம் பாடல் இயற்றுமாறு வேண்டுகின்றனர். அதை ஏற்ற புலவர் ஒற்றை ஜோடிப் பாடலை இயற்றுகிறார். அப்பாடலைக் கேட்ட அரசன் பழைய மனநிலைக்குத் திரும்புகிறான். அதன் பிறகு 700 ஜோடிகளைப் பாடச் சொல்கிறான். அச்சூழலில் இயற்றப்பட்டதே சத்சயி பிஹாரி பாடல்களாகும். பிஹாரி பாடல்கள் இரண்டடி அமைப்புக் கொண்ட

பாடல்களாக உள்ளன. இவை இந்தி இலக்கிய மரபில் மிகக் குறுகிய அடிகளையுடைய பாடல்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்தி மொழி வரலாற்றில் காதலை முதன்மையாகக் கொண்டு பல இலக்கியங்கள் தோன்றியிருந்தாலும் மக்கள் பிஹாரியை உயர்ந்த தளத்தில் வைத்துப் பார்க்கின்றனர். இவரதுப் பாடல்களில் மனிதர்களை வடிவமைக்கக் கூடிய விதம், பெண்களின் வசீகரம், இயற்கையின் அழகு, போன்றவை முக்கியத்துவம் பெறுகிறது. கோடை, வசந்தம், கார், பனி முதலிய இந்திய பருவகாலங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் காதலும் அழகும் இவரது பாடல்களில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன.

**ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்களிலுள்ள அடிக்கருத்துக்கள்**

இப்பாடல்களில் உள்ள அடிக்கருத்துக்கள் கதாபாத்திரங்களை வைத்தும் அந்த கதாபாத்திரங்களின் வழி உணர்ந்துகொள்கின்ற செய்திகளை அடிப்படையாக வைத்தும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பாடலின் அடிமூலச் செய்தியானது கதாபாத்திரங்களின் வழி மட்டுமல்லாது இயற்கையோடும் இணைந்தே உள்ளது. அடிக்கருத்தில் முக்கிய பங்காற்றக்கூடிய குறிப்புப் பொருளும் பெரும்பான்மையாக இயற்கையை மையமிட்டதாகவே உள்ளது. இதனை அடிப்படையாக வைத்து ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்களின் அடிக்கருத்துக்களை மகிழ்ச்சி, வருத்தம், ஆற்றுப்படுத்துதல், ஏக்கம், பிரிவு, மலர்ச்சி, ஆற்றாமை, கடிந்துரைத்தல் என்று எட்டு வகைகளாகப் பகுத்துக்கொள்ள முடியும்.

**வருத்தம்**

வருத்தம் என்பது தலைவனை உடலளவிலும் உள்ளத்தளவிலும் பிரிந்திருக்கும் போதும், இருவரும் சந்திக்க முடியாத சூழலிலும் ஏற்படுகிறது. தலைவியின் வெறியாடலின் போது தலைவனுக்கும், தலைவியின் நிலையை எண்ணி தோழிக்கும் வருத்தம் ஏற்படுவதாக உள்ளது. காமநுகர்ச்சித் தடைப்படும்போது தலைவனுக்கும் தலைவிக்கும் வருத்தம் ஏற்படுகிறது.

“நறுவடி மாஅத்து முக்கிறு புதிர்ந்த
விர்ந்தண் பெருவடுப் பாலையிற்
மீமிசை நன்னாட் டவர் வரின்
யானுயிர் வாழ்தல் கூடு மன்னாய்”

தலைவன் வரையாமல் இருக்கும் போது தலைவனுடைய நாட்டினை சேர்ந்த மக்கள் அவனுக்கு என்னை பெண் கேட்டு வந்தால் மட்டுமே உயிர் வாழ்வேன் என தலைவி அவளது வருத்தத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

**ஆற்றுப்படுத்துதல்**

தலைவனும் தலைவியும் களவு வாழ்க்கையிலிருந்து கற்பு வாழ்க்கைக்குச் செல்வதாக தாயிடம் தலைவனைக் குறித்துக் கூறி தோழி அவளை ஆற்றுப்படுத்துவதாக அமைகிறது. தலைவன் தலைவியை விட்டு

பிரிந்திருக்கும்போதும் தலைவி தலைவனின் பிரிவைத் தாங்க முடியாமல் வருத்தமுற்றவளாக இருக்கும்போதும் தோழி, தலைவன் விரைவில் வந்துவிடுவான் என ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

“மாற்றலம் யாமென மதிப்பக் கூறி
நம்பிரிந் துறைந்தோர் மன்றநீ
விட்டனை யோவவ ருற்ற சூளே”

தலைவனைப் பிரிந்து தலைவி வருத்தமுற்றிருக்கும்போது அவன் விரைந்து வருவான் என்று சொல்லிச் சென்றதை நினைவுபடுத்தி தலைவன் சொல்லியபடி வந்து விடுவான் எனத் தோழி, தலைவியை ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் உள்ளது .

**ஏக்கம்**

ஏக்கம் என்னும் அடிக்கருத்தானது தலைவனுடன் தலைவி இன்புற்றிருக்க முடியவில்லை என்ற இடத்திலும் அவனது மார்பினை அடைய முடியவில்லை என்ற இடத்திலும் வெளிப்படுவதாக உள்ளது. இப்பாடல் வரைவு நீட்டித்துக் கொண்டிருக்கக்கூடிய தலைமகனைத் தலைவி சந்திக்காமல் ஏக்கமுற்று இருப்பதாக, சிறைப்புறத்தானாக இருக்கக்கூடிய தலைவனுக்குத் தோழிக் கூறுவதாக அமைந்துள்ளது.

"குறுங்கை இரும்புலி கோள்வல் ஏற்றை
நடும்புதற் கானத்து மடப்பிடி ஈன்ற
நடுங்குநடைக் குழவி கொளீஇய பலவின்
பழந்தூங்கு கொழுநிழல் ஒளிக்கு நாடற்குக்
கொய்திடு தளிரின் வாடிநின்
மெய்பிறி தாகம் எவன்கொல் அன்னாய்".

**பிரிவு**

வரைவிற்காகப் பொருள்வயிற் பிரிந்து தலைவன் செல்லும்போதும், தலைவியைப் பிரிந்து தலைவன் தன் நாட்டுக்கு திரும்பும்போதும், வரைவை வேண்டி சந்திக்காமல் இருக்கும்போதும் பிரிவு என்ற அடிக்கருத்து வெளிப்படுவதாக உள்ளது.

“சுரும்புணக் களித்த புகர்முக வேழ
மிரும்பிணர்த் துறுகற் பிடி செத்து தழூஉனின்
குன்றுகெழு நன்னாட்டுச் சென்ற பின்றை
நேரிறைப் பணைத்தோண் ஞெகிழ
வாரா யாயின் வாழேந் தெய்யோ”

தலைவன் வரைதற் வேண்டித் தனது ஊருக்குச் செல்வதாகக் கூற தோழி தவைவனிடம் விரைவில் திரும்பவில்லை எனில், உனது பிரிவால் தலைவி உயிர் வாழ்ந்திருக்க மாட்டாள் எனக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**பிஹாரி பாடல்களிலுள்ள அடிக்கருத்துக்கள்**

பிஹாரி பாடல்களிலுள்ள அடிக்கருத்துக்கள் கவிதை மாந்தர்களோடும் நிகழ்வுகளோடும் தொடர்புடையதாக உள்ளது. கவிதை மாந்தர்களின் உணர்வுகளையும் அவற்றை வெளிப்படுத்துவதற்காகக் கையாளப்படுகின்ற குறிப்புப்பொருளை அடிப்படையாக வைத்தும் ஒன்பது வகைகளாகப் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மகிழ்ச்சி, வருத்தம், ஆற்றுப்படுத்துதல், ஆற்றியிருத்தல், ஏக்கம், பிரிவு, வளர்ச்சி, பெருமிதம், அறக்கருத்துக்கள்.

**வருத்தம்**

வருத்தம் என்னும் அடிக்கருத்து தலைவனும் தலைவியும் சந்திக்காமல் இருக்கும்போது அவற்றை எண்ணித் தலைவி வருத்தமடைகிறாள். இருவரும் கூடி, பிறகு அவன் ஊருக்கு திரும்பிச் செல்லும் போதும் அவள் வருத்தமுற்றிருக்கிறாள். தலைவன் தன்னை விடுத்து வேறொருத்தியுடன் கூடி இன்புற்று வருகையில் அதனைக் குறிப்பால் அறிந்த தலைவி வருத்தமாக இருக்கும் சூழலில் இவ்வடிக்கருத்து வெளிப்பட்டிருக்கிறது.

“அன்பரே
உமது புருவங்களில்
வெற்றிலைக் கறையும்
உதடுகளில் விளக்கு மையும்
எப்படி வந்தது”

தலைவன் வேறொருத்தியுடன் கூடி மீண்டும் தலைவியிடம் வரும்போது, குறிப்பால் அவனது செயலை அறிந்தவள் பெண்கள் இடுகின்ற கண் மையும் வெற்றிலையின் சிவப்புக் கறையும் உன்னிடம் எவ்வாறு வந்ததெனத் தன் வருத்தத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

**ஆற்றுப்படுத்துதல்**

தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து சென்றிருக்கும்போது விரைந்து வந்து விடுவான் என்று தோழி ஆற்றுப்படுத்துவாள். தலைவன் மீது தலைவி கோபமுற்று பிரிந்திருக்கும்போது தோழி அவளுக்கு எடுத்துரைத்து அவனோடு சேர்வதற்கான அறிவுரைகளைக் கூறும் இடங்களில் இவ்வடிகருத்து வெளிப்பட்டுள்ளது.

“சூரியனின் வேம்மையாலோ
சுடு நெருப்பினாலோ
கனத்த கம்பளியால்
உடல் முழுவதும் சுற்றிக் கொள்வதாலோ
இப்பனிக் காலத்தில் குளிரை
தனியொருத்தியாக வெல்ல முடியாது
உனக்குள்ள ஒரே வழி

காதலரை இருக்க
கட்டிக்கொண்டு உறங்குவது தான்”

**ஏக்கம்**

ஏக்கம் என்னும் அடிக்கருத்தானது தலைவனும் தலைவியும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று ஏங்கும் இடங்களில் வெளிப்படுகிறது. இங்கு ஏக்கம் இருவருக்கும் ஏற்படுவதாகப் பாடல்களில் சுட்டப்பட்டிருக்கிறது.

“துடிப்பும் மிளிர்ப்பும்
மிளிர்வும் நேர்த்தியும்
மெலிவும் வளைவும்
கூடிய மேனியாளைக்
கண்ட கணத்திலிருந்து
பெண் நாகம்
தீண்டினாற் போலும்
வலிமிக்க ஏக்கம்
வருத்துகிறது என்னை”

இப்பாடல் தலைவன் தலைவியின் அழகிய மேனியை மீண்டும் காண வேண்டும் என ஏக்கமுற்றிருப்பதாக அமைந்துள்ளது.

பிரிவு

தலைவனும் தலைவியும் உடலாலும் உள்ளத்தாலும் பிரிந்திருக்கும் சூழலை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

“பிரிவேக்கத்தால் எனக்குத்தான்
பித்து பிடித்து விட்டதா?
அல்லாது போயின்
இவ்வூர் மக்கள் தாம்
கிறுக்காகி போயினரா?
இல்லையெனில்
என்னை சுடும் இந்நில ஒளியை
ஏனிவர்கள் குளிர்மை என்கிறார்கள்”

இப்பாடல் தலைவனின் பிரிவுத்துயர் தலைவியைத் துன்புறுத்துவதாக உள்ளது. தலைவிக்குத் தன் துயரால் காதலர்களுக்கு இனிமை தரக்கூடிய குளிர்ச்சிப் பொருந்திய நிலவொளி சுடுவது போல வருத்துகிறது எனப் பிரிவை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

**முடிவுரை**

இக்கட்டுரையின் மூலம் ஐங்குறுநூற்றுக் கபிலர் பாடல்களில் மகிழ்ச்சி, வருத்தம், ஆற்றுப்படுத்துதல், ஏக்கம், பிரிவு, மலர்ச்சி, ஆற்றாமை, கடிந்துரைத்தல் என எட்டு அடிக்கருத்துக்களும் பிஹாரி பாடல்களில் மகிழ்ச்சி, ஆற்றுப்படுத்துதல்,

ஆற்றியிருத்தல், பிரிவு, மலர்ச்சி, பெருமிதம், அறவுரை என ஒன்பது அடிக்கருத்துக்களும் கண்டறியப்பட்டன.

**சான்றெண் விளக்கம்**

உ.வே.சா.,ஐங்குறுநூறு மூலமும் உரையும்., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை:

போ.வே.சோமசுந்தரனார்.{ப.ஆ}.ஐங்.203

மேலது.227

மேலது.216

மேலது.239

மேலது.98

மோகனரங்கன்.க.,நீலமணிக் கிண்ண நீரில் தோன்றும் நிலா.{மொ.ஆ}.பா.எண்.47

மேலது.98

மேலது.31